அரசுக்குத் தெரிவித்திருக்கிறோம். அவர்களும் அவர்களுடைய கட்டு மானப் பணிகளைத் தீவிரப்படுத்துவதாகத் தெரிவித்திருக் கிறார்கள்.

திரு. வ. சத்தியமூர்த்தி: தலைவரவர்களே, மதுரையில் துவக்கப்பட இருக்கும் புதிய வானொலி நிலையம், திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள ரிலே செய்கின்ற நிலையங்கள் போல் செயல்படுமா அல்லது தனித்து செயல்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, மதுரையிலே அமைகின்ற வானொலி நிலையம் தனியாக இயங்கு கின்ற வானொலி நிலையமாக இருக்கும்.

முதுமலைக் காட்டில் வனவிலங்குகளைக் விருத்தி செய்வதற்கான திட்டம்

*வினா எண். 176— திரு. சி. கணேசன்: மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம் முதுமலைக் காட்டில் வனவிலங்குகள் (சிறுத்தை, புலி) போன்ற இனத்தை விருத்தி செய்யத் திட்டம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: 351 சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள முதுமலை வனவிலங்கு உய்விடத்தில் 63.88 சதுர கிலோமீட்டர் பரப்புள்ள பகுதியை புலி ஒதுக்கப்பகுதியாக அறிவிப்பது குறித்தும் உய்விடத்தில் மையப்பகுதியை புலி ஒதுக்கப்பகுதியாகவும் இதைச் சுற்றியுள்ள மீதமுள்ள பகுதிகளை வனவிலங்குகள், கால்நடைகள் மேய்ச்சல் வன சம்பந்தமான பணிகளை மேற்கொள்ளுதல் போன்ற காரியங் களுக்குப் பயன்படுத்தும் வகையிலும் திட்டம் மேற்கொள்வது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

திரு. சி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வனம் கேரள மாநிலம் மற்றும் கர்நாடக மாநிலம் ஆகியவற்றின் எல்லைக் கோடுகளுக்குள்ளே இருப்பதன் காரணத்தால் இந்த வனவிலங்குகள் எல்லா மாநிலங்களிலும் அட்டென்டன்ஸ் கொடுத்துக் கொண்டிருக்கும். எனவே இந்த நிலைமையைப் போக்குகின்ற வகையிலே அவற்றை நம்முடைய மாநிலத்திற்குள்ளேயே விருத்தி செய்வதற்காக ஆங்காங்கே இருக்கின்ற வனவிலங்குகளை எல்லாம் எடுத்து நம்முடைய தமிழக எல்லைக்குள்ளே இருக்கின்ற வனங்களிலே அதாவது வால்பாறை, வள்ளிமலை போன்ற இடங்களில் விட்டு அவற்றை மேலும் விருத்தி செய்யக் கூடிய திட்டம் ஏதாவது அரசிடம் இருக்கின்றதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வனவிலங்குகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவது என்பது இயலாது. அது இயற்கையாக ஒரு எல்லையிலே இருந்து இன்னொரு எல்லைக்கு குறிப்பிட்டக்

காலங்களிலே சென்று உலவி வருகின்ற பழக்கத்தை வைத்துக் கொண்டிருக்கின்றது. ஆனால் அவற்றைக் கணக்கெடுகின்ற முறை என்பது அவைகளை எல்லாம் சேர்த்து வைத்து கணக்கெடுப்ப தில்லை. ஒரு குறிப்பிட்ட நாளில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஆட்களை ஆங்காங்கே நியமித்து ஒரே நேரத்தில் அவர்களுடைய கண்களில் தட்டுப்படுகின்ற வகையில் தான் கணக்கெடுகிறோம். ஆகவே வேறு மாநில எல்லைக்குள்ளே சென்றால் அவற்றைக் கணக்கெடுப்பது என்பது அதற்குள்ளே வராது. மேலும் இப்படிப் பட்ட வனவிலங்குகளின். சரணாலயங்களை, உய்விடங்களை தமிழக அரசு 7இடங்களிலே இப்போது விரிவுபடுத்தி அபூர்வமாக இருக்கக்கூடிய அந்த விலங்குகளையும் பறவைகளையும் பாது காப்பதற்கும் விருத்தி செய்வதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

திரு.சி. கணேசன்; தலைவரவர்களே. நம்முடையதமிழகத்தைச் சேர்ந்த கிராஸ்ஹில்ஸ், டாப் ஹில்ஸ் போன்ற பகுதிகளிலே மிகவும் சிறிய அளவுள்ள யானைகள் தான் வாழ்கின்றன. அந்த இனத்தினை மற்ற முதுமலைக் காடுகளில் வாழ்வது போன்ற பெரிய யானைகளாக ஆக்குகின்ற வகையிலே அவற்றின் இன விருத்தியினை அதிகப்படுத்துவதற்குரிய நோக்கம் ஏதாவது அரசினிடத்தில் இருக்கின்றதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராஸ் ஹில்ஸ் என்று அழைக்கப் படுகின்ற அந்த வனப்பகுதி இப்போது ஆனைமலை வனவிலங்கு சரணாலயம் அமைக்கப்பட்டிருக்கின்றபகுதிக்குள்ளே அமைந்திருக் கின்றது. அங்கே இருக்கின்ற யானைகளை மேலும் வளர்ப் பதற்கும் பாதுகாப்பதற்கும் அந்த இடத்தினை ஒரு நேஷனல் பார்க் என்று அறிவிக்க வேண்டும் என்ற வகையில் சட்டமியற்ற வேண்டும் என்ற வேண்டுகோள் இப்போது வனவிலங்கு ஆராய்ச்சி நிபுணர்களிடத்திலிருந்து அரசுக்கு வந்து கொண்டிருக்கின்றது. அந்தக் கருத்தும் அரசின் பரிசீலனையில் இருக்கின்றது என்பதைக் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு.மு.அரங்கநாதன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி, முதுமலைக் காடுகளில் உள்ள யானைகள் அந்த சுற்று வட்டாரப் பகுதிகளுக்குள்ளே வந்து அங்கே உள்ள மக்களுக்கும், பயிர்களுக்கும் சேதத்தை விளைவித்து வருகின்றது எனவே அவற்றைப் பிரித்து மற்றொரு பிரிவாக ஆக்கி குன்னூர் போன்ற பகுதிகளில் ஒரு சரணாலயத்தை அமைக்கஅரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே' இப்போதுள்ள பிரச்னையெல்லாம் யானைகளால் மக்களுக்கு ஏற்படுகிற துன்பத்தை விட மக்களால் யானைகளுக்கு ஏற்படுகிற துன்பம் தான் அதிகமாயிருக்கிறது என்ற புகார் வந்து கொண் டிருக்கிறது. அதைத் தடுப்பதற்காகத்தான் அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

1983 பிப்ரவரி 8]

திரு.கே.உச்சி: முதுமலைக் காடுகளில் வசிக்கும் யானைகள் புலிகள் மற்றும் மனிதர்களின் நடமாட்டத்தால் அவைகள் வெளியேறுகின்றன என்றுஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப் பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படியானல் அதற்கு மாற்று திட்டம் ஏதாவது உண்டா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: வனவிலங்கு ஆராய்ச்சி யாளர்கள் முதுமலைப் பகுதி ஒரு மிகச் சிறந்த வனவிலங்கு காப்பகமாக இருக்கிறது என்றும்,அதைப் பாதுகாப்பதில் அரசு தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்றும் ஆகவே, அங்கே மனித நடமாட்டத்தை மிகப் பெரிய அளவில் குறைக்க வேண்டும் என்றும் அவர்கள் அரசுக்கு ஆலோசனைகள் வழங்கியிருக் கிறார்கள். மத்திய அரசுக்கும் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் இயற்கையாகவே அங்கே அமைந்துவிட்ட சில கிராமங்கள் அந்தப் பகுதிகளுக்குள்ளே இப்போது இருக்கின்றன. அவர்களை யெல்லாம் வெளியேற்றுவது என்பது அல்லது அந்த மக்களுக்கு வேறு இடங்கள் தருவது என்பது மிகப் பெரிய நிர்வாகப்பிரச்னை இருக்கிறது. அவைகளையெல்லாம் மனதில் வைத்து அதிககவனம் செலுத்தப்படுகிறது என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. கா. நல்லப்பான்: மொத்தமுள்ள $32\frac{1}{4}$ சதுர கிலோ மீட்டரில் இந்த வனவிலங்குக்காக 63 சதுர கிலோ மீட்டர் ஒதுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள் அப்படி ஒதுக்கப்பட்ட இடத்தில் கூட மனிதர்கள் அல்லது கால்நடைகள் செல்வதற்கு இடம் கொடுக்காமல் போர்ட் மாட்டி அங்கே செல்லக் கூடிய உயிர்களைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொஞ்சம் அந்த விடையைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். 321 சதுர கிலோ மீட்டர் என்பது முதுமலை வனவிலங்கு உய்விடம். அது முழுவதும் பாதுச்ாக்கப்பட்ட இடமாகும். நான் அளித்த பதிலில் 63.88 சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள ஒரு மையப் பகுதியை புலிகள் வாழ்வதற்கு என்று தனியாக ஒதுக்குகிற இடத்தை மத்திய அரசுக்கு தெரிவித்திருக்கிறோம். அது புலிகள் வாழ்கிற பகுதி என்பதால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது போல். அது மற்ற விலங்குகள் நடமாற்றத்திற்கு ஆபத்து விளைவிக்கிற பகுதி என்று பொருள். அந்தப் பகுதியில் மாத்திரம் யாருமே செல்லாக, அதே நேரத்தில் புலிகளுக்கு சில தீனி வேண்டும். அதற்கென்று சில மிருகங்கள் அங்கே உருவாக்கப்பட வேண்டும். அப்படி புலிகளுக்கு தீனியாக இருக்கிற அந்த மிருகங்களுக்கு உணவு வேண்டும். அதற்கு பயிர்கள் வளர்க்கப்பட வேண்டும்- இப்படிப்பட்ட ஒரு இயற்கையான சூழ்நிலையை அமைப்பதற்கு 63.88 சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள அந்தப் பகுதியை மட்டும் புலிகள் வாழ்கிற இடமாக மாற்றுவது என்று தீர்மானித்து மத்திய அரசுக்கு தெரிவித்திருக்கிறோம், அப்படி மாற்றினால் அந்தப் பகுதிக்குள் எந்த நடமாட்டமும் இல்லாமல் கட்டுப்படுத்தப்படும்.